*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*27 07 2025 SUNDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழகத்தின், கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பங்கேற்றுள்ள பிரதமர், மாமன்னன் ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை வெளியிடுகிறார்.

3. முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் நினைவு தினத்தை ஒட்டி, தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

4. உத்ராகண்ட் மாநிலம், ஹரித்வாரில் உள்ள கோவில் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

5. தாய்லாந்து – கம்போடியா இடையேயான மோதலுக்கு தீர்வு காண, இருநாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

*>>>>><<<<<*

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் பிரதமர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பிரதமர் (1) 64 செகண்ட்ஸ்)

மஹாராஷ்ட்ராவிலும், தமிழகத்திலும் உள்ள மராட்டிய பேரரசுடன் தொடர்புடைய 12 கோட்டைகள் யுனெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டு மக்கள் அனைவரும் இந்த கோட்டைகளுக்கு பயணம் மேற்கொண்டு நம்முடைய வரலாற்றை தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் – பிரதமர் (2) 66 செகண்ட்ஸ்)*

*குழந்தைகளின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதற்கான Inspire Manak இயக்கத்தில் லட்சக்கணக்கான குழந்தைகள் இணைந்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (3) 25 செகண்ட்ஸ்)*

*தஞ்சாவூரைச் சேர்ந்த மணிமாறன் என்பவர் ஓலைச்சுவடிகள் குறித்து மாலைநேர வகுப்பு நடத்தி வருவதை சுட்டிக்காட்டிய பிரதமர், நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை அறிந்துகொள்ள ஓலைச்சுவடிகள் பெரிதும் பயன்படுவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (4) 49 செகண்ட்ஸ்)*

*உலக காவலர் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான விளையாட்டுப் போட்டிகள் 2029ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.*

*பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம், சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தின், கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்று வரும் முப்பெரும் விழாவில் பங்கேற்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்னும் சற்று நேரத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை வெளியிடுகிறார்.*

*திருச்சியிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் கங்கைகொண்ட சோழபுரம் சென்றடைந்த பிரதமரை, ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன். மாநில அரசின் சார்பில் அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் வரவேற்றனர்.*

*ஓதுவார்கள் தேவாரம் பாடி, பிரதமருக்கு வரவேற்பளித்தனர்.*

*அதனைத் தொடர்ந்து, கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் வழிபாடு செய்யும் அவர், கோவில் அருகே அமைக்கப்பட்டுள்ள சைவ சித்தாந்தமும், சோழர் கோவில் கலைகளும் என்ற தலைப்பிலான கண்காட்சியை பார்வையிடுகிறார்.*

இசைஞானி இளையராஜாவின் திருவாசக இசை நிகழ்ச்சியையும் பிரதமர் கண்டு ரசிக்கவுள்ளார்.

முன்னதாக, திருச்சி நட்சத்திர விடுதியிலிருந்து விமான நிலையம் வந்த பிரதமருக்கு, சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

>>>>><<<<<

முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நமது பேரன்பிற்குரிய அப்துல் கலாமிற்கு அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தலைசிறந்த விஞ்ஞானியும், தேசப்பற்று மிகுந்த வழிகாட்டியுமான அவரது தொலைநோக்குப் பார்வை உத்வேகம் அளிக்கக்கூடியது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டிற்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் கலம் ஆற்றிய பணிகள் ஏராளம் என்று கூறியுள்ள பிரதமர், வலிமையான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் தங்களது பங்களிப்பை வழங்குவதற்கு கலாமின் சிந்தனைகள் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை பன்மடங்கு உயர்த்திக் காட்டியவர் அப்துல் கலாம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தேசத்தின் வளர்ச்சி இளைஞர்களின் கையில் உள்ளது என்பதை தீர்க்கமாக நம்பியவர் அவர் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ராமேஸ்வரம் அருகே பேக்கரும்பில் உள்ள அப்துல் கலாமின் நினைவிடத்தில், இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன், மாவட்ட ஆட்சியர் திரு. சிம்ரன்ஜித் சிங் காலோன் மற்றும் பல்வேறு அமைப்பினர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

>>>>><<<<<

உத்ராகண்ட் மாநிலம், ஹரித்வாரில் உள்ள கோவில் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

வழிபாடு செய்வதற்காக ஏராளமான மக்கள் குழுமியிருந்த வேளையில், உயர்மின் அழுத்த கம்பி அறுந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்தில் காவல்துறையினரும், மாநில பேரிடர் மீட்புப் படையினரும் மீட்புப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டுள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி ஆழந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தாய்லாந்து – கம்போடியா இடையேயான மோதலுக்கு தீர்வு காண, இருநாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து, தாம் மேற்கொண்ட அமைதி முயற்சியின் விளைவாக, இருநாட்டு தலைவர்களும் உடனடியாக சந்தித்து பேச சம்மதம் தெரிவித்திருப்பதாக அதிபர் திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

எல்லைப் பிரச்சினை காரணமாக, தாய்லாந்து மற்றும் கம்போடியா ராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக, இருதரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

எல்லைப்பகுதிகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

>>>>><<<<<

பீகார் மாநிலத்தில் துப்புரவு தொழிலாளர்களுக்கென ஆணையம் ஒன்று அமைக்கப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஆணையம் அமைக்கப்படுவதன் மூலம், துப்புரவு தொழிலாளர் சங்கங்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

***இந்த ஆணையம் மாநிலத்தில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.***

***அத்துடன், தொழிலாளர்களின் நலன், மறுவாழ்வு, சமூக மேம்பாடு மற்றும் அவர்களுக்கான நலத்திட்டங்களை கண்காணிப்பதில் கவனம் செலுத்தும் என்றும் திரு. நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.***

***>>>>>END<<<<<***